விலை சதம் 10

# சத்தியம்

"எங்கள் உழைப்பெல்லாம் இந்த நாட்டில் உள்ளவர்க்கே"

ஆணை 1 | [செப்ரம்பர் 1 1970] | பணி 2

சகலவிதமான
மோட்டார் ட்றக்ரர்,
உப உறுப்புகள்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஈஸ்வரி
மோட்டார் ஸ்ரோர்ஸ்
8/4, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

## ஈழத்து எழுத்தாளர்களின்

# போர்க்கோலம்!

எந்த நாட்டுச் சரித்திரத்தை எடுத்துப்பார்த்தாலும் அந்நாட்டின் எழுச்சிக்கும் சமுதாய அரசியல் மறுமலர்ச்சிக்கும் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் ஆற்றியுள்ள பங்கின் முக்கியத்துவத்தை யாரும் மறுக்க முடியாது. ரூசோ வோல்டயர், மொன்டெஸ்கியூ போன்ற சிந்தனையாளர்களை நினைக்காமல் நாம் பிரஞ்சுப் புரட்சியை நினைக்கமுடியாது. லெனின் ட்றொஸ்ட்கி கோர்க்கி போன்ற செயலும் சிந்தனையும் சேர்ந்த எழுத்தாளர்களை நினைக்காமல் நாம் ரஷ்ஷியப் புரட்சியை நினைக்க முடியாது. இப்படி ஒவ்வொரு நாட்டின் எழுச்சியும் அந்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களோடு சம்பந்தப்பட்டே வந்துள்ளது. அது உண்மை.

இலங்கையில் 56க்குப் பின் சிங்கள மக்களிடையே ஏற்பட்ட விழிப்புக்கும் மறுமலர்ச்சிக்கும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவை மட்டும் காரணம் காட்ட முடியாது. அவருக்கு முன்னரே கலை இலக்கியத் துறைகள் மூலம் மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி 1956-ல் பண்டாரநாயக்கா கொண்டுவந்த அரசியல் எழுச்சிக்கு வழிவகுத்திருந்த மார்டின் விக்கிரமசிங்க, சரச்சந்திரா போன்ற கலைஞர்களின் பங்கை நாம் மறந்து விடக்கூடாது.

ஆனால் இன்னும் இலங்கைத் தமிழரிடையே (இந்தியத் தமிழரிடமுந்தான்) இத்தகைய அரசியல் சமூக மாற்றத்துக்கான விழிப்பு ஏற்படாததற்கும் அங்கு இன்னும் 'தமிழ் தமிழ்' என்றுமட்டுமே கத்தும் குருட்டு அரசியல் கட்சிகள் ஆட்சி நடத்துவதற்கும் கராணம் நமது எழுத்தாளர்கள் தமது சமுதாயப் பொறுப்பை உணராததேயாகும்.

இன்றய நமது நிலை

ஆனால் இன்று அந்த நிலைமை மாறத் தொடங்கிவிட்டது. தமிழ் மக்களின் உண்மையான எழுச்சிக்கும் விழிப்புக்கும் எழுத்தாளர்களே தலைமை தாங்கத் தொடங்கிவிட்டனர். இதை நிரூபிப்பதுபோல் சென்ற மாதம் 22-ம் திகதி யாழ்பிரதேச எழுத்தாளர்கள் திரு டொமினிக்ஜீவாவின் தலைமையில் சென்று கலாச்சார அமைச்சரை சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றுள் முக்கியமானவை இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் குப்பை இலக்கியங்களைத் தடை செய்ய வேண்டும் என்பதும் அங்கிருந்து கலை என்ற பேரில் இறக்குமதியாகும் கீழ்த்தர சினிமாப் படங்களைத் தடைசெய்ய வேண்டும் என்பதுமாகும்.

இவற்றின் இறக்குமதியால் ஈழத்து தமிழினம் அடைந்துள்ள வக்கரிப்பும் சீரழிவும் அளவிடற்கரியது

பிறசமூகங்கள் எல்லாத் துறைகளிலும் முற்போக்காக இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது, தமிழினம் மட்டும் வெறும் சிவாஜி, எம். ஜி. ஆர். என்று சினிமாக் கனவு கண்டு கொண்டும் பொம்மை, குமுதம் படித்துக் கொண்டும் இருக்கும்போது எப்படி முன்னேறுவது?

இதன் காரணத்தால் இவர்களால் ஆழமான கலை இலக்கியங்களை அறியவோ ரசிக்கவோ சிந்தித்துப் பார்க்கவோ முடிவதில்லை.

இதனுல் இவர்கள் எப்படி நாட்டிலே சமூக. பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வரலாம் என்பதை அறிவதில்லை. அப்படிக்கொண்டு வருவதன்மூலம் எப்படி தமிழுக்கும் விடுதலை அளிக்கலாம் என்பதை உணர்வதில்லை, இந்தச் சீரழிவுக்கெல்லாம் காரணம் இவர்கள் படிக்கும் நூல்களும் பார்க்கும் படங்களுமே முக்கிய காரணமாகும்.

ஆகவே இத்தகைய குப்பைகளை இனிமேல் இறக்குமதி செய்வதை நிறுத்தி வங்காளத்தில், கேரளத்தில், சிங்களப்பகுதிகளில் செய்வதுபோல் தரமான இலக்கிய சிருஷ்டிகளையும் உலகத்தரம் வாய்ந்த சினிமாப் படங்களையும் இலங்கையிலேயே உண்டாக்குவதற்கும் அதைக் கொண்டே மக்களின் சிந்தனையை உயர்த்துவதற்கும் எழுத்தாளர்கள் சபதம் எழுந்துள்ளனர். அதற்கு அரசாங்கமே ஆதரவு தருகிறது.

கலைமாளிகைகள்

கூடவேமேற்கு நாடுகளில் உள்ளது போல் கலைஞர்கள் கூடவும் விவாதிக்கவும் பிரதேச ரீதியாக கலைமாளிகைகளை உண்டாக்கித் தருவதற்கும் அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. இத்தகைய கலைமாளிகைகளை ஏற்படுத்துவதோடு மூலை முடுக்கிலுள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் பிரச்சாரங்கள் நடத்தி மக்களை வழிப்படுத்தவும் எழுத்தாளர்கள் ஆவனசெய்து வருகின்றனர்.

குப்பைச் சஞ்சிகைகளும் குப்பைக் கட்சிகளும்

இவற்றின் காரணமாக, இதுகாலவரை ஈழத்து தமிழ் மக்களையும் அவர்தம் முன்னேற்றத்தையும் பின்னுக்கு இழுத்துக் கொண்டு நிற்கும் பிற்போக்கு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## ஈழத்துத் தமிழ்ப்பட வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை

# பட முதலாளிகளின் புதிய தந்திரம்?

இப்போது ஈழத்துத் தமிழ்த் திரைப்படக் கலைவளர்ச்சிக்கு வகைசெய்யும் நோக்குடன் அரசாங்கம் இந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியில் 25 சதவீதக் குறைப்பை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து இலங்கையில் நல்ல, தரமான தமிழ்ப் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறந்துள்ளது. இதற்கான பல நல்ல முயற்சிகள மேற்கோள்ளப் படுகின்றன.

இந்த நிலையில் இந்த ஆரோக்கியமான நிலைக்கும் குழிபறிக்க திரைப்பட இறக்குமதியில் ஈடுபட்டுள்ள ஏகபோக முதலாளிகள் சிலர் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

கை வசம் குறிப்பிட்டளவு திரைப் படங்கள் திரையிடப்படாது ஸ்டொக்கிலிருந்தால் புதிய படங்களை இறக்குமதி செய்ய பேர்மிட் பெற முடியாது என்ற ஒரு விதியிருக்கிறது. ஆகவே இதிலிருந்து தப்பி புதிய படங்களைத் தருவிப்பதற்காக இந்த முதலாளிகள் கும்பல் தம்கை வசமுள்ள படங்களை நாட்டுப் புறங்களிலுள்ள சினிமா கோட்டகைகளில் அவசர கோலத்தில் திரையிட்டு வருகிறதாம். இவ்வாறு ஒதுக்குப் புறங்களில் திரையிட்ட பின்னர், கைவசம் திரையிடப்படாத படங்கள் இல்லை என்று காரணம் காட்டி புதிய படங்களைத் தருவிக்க இவர்கள் விழைந்துள்ளார்கள்.

அதேவேளை, திரைப்பட இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் நல்ல வாய்ப்புத் தோன்றியுள்ளது என்ற எண்ணத்தில் புதிய ஈழத்துத் தமிழ்படங்களை தயாரிப்பவர்கள், அவ்வாறு தாம் தயாரிக்கும் படங்களைத் திரையிட முயலுப் போது, நகர்ப்புறங்களில் காட்டாது நாட்டுப் புறங்களில் மட்டும் காட்டிய திரைப் படங்கள் நகர்ப்புறங்களில் திரையிடப் படுமோம். (இப்படி நடை பெற்றுல் உள்ளூரில் தயாரித்த படங்களின் வசூலைக் குறைப்பதோடு அவற்றின் வளர்ச்சியையே கவிழ்த்து விடலாம்)

— தகவல் தேசாபிமானி

★ சர்வோதயப் பொதுவுடமைக் குரல் ★

இருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்.
— பாரதி

## சத்திய நோக்கு

## அன்றும் இன்றும்

"ஆண்மைமிக்க இலக்கியத்துக்காக தாய் நாடாகிய இங்கிலாந்து அமெரிக்காவை இன்று எதிர்பார்த்திருப்பதுபோல் தமிழ் நாடும் ஆண்மைமிக்கதரமான இலக்கியத்துக்காக ஈழத்தை அணுகும் காலம் ஆரம்பித்துவிட்டது"
மு. த. ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி (1963)

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் நவீன இலக்கியம் தமிழ் நாட்டு பத்திரிகைகளினதும் எழுத்தாளர்களினதும் அநுசரணையோடும் செல்வாக்கோடுந்தான் ஆரம்பமாயிற்று. அதை யாரும் மறுக்க முடியாது. அதனுல் தமிழ்நாட்டுச் சூழலும் பேச்சுடையும் இலங்கை எழுத்தாளரின் கதைகளில் அன்று ஆதிக்கம் செலுத்தின.

1950 ப் பின்னர் ஓர் மாற்றம் நிகழ்ந்தது. இந்த மாற்றத்தின் பண்புகளை இருவகைப் படுத்தலாம்,

(1) ஈழத்து எழுத்தாளர் தமது சிருஷ்டிகளை இலங்கைச் சூழலுக்கும், பிரதேசப் பேச்சு நடைக்கும் ஏற்றவாறு எழுதினர்.

(2) இதனுல் தமிழ்நாட்டு ஆதிக்கத்திலிருந்து நவீன ஈழத்து தமிழ் இலக்கியம் விடுதலை பெற்றது. இதன் பெறுபேருக இலங்கைப் பத்திரிகைகளில் குப்பைக் கதைகள் எழுதி பணம் சம்பாதித்த பல மூன்ருந்தர தமிழ் நாட்டு எழுத்தாளர் ஒதுக்கித் தள்ளப்பட்டனர். இலங்கை எழுத்தாளரின் தரமான சிருஷ்டிகள் அந்த இடத்தைப் பிடித்தைப் பிடித்துக் கொண்டன. வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை, டொமினிக்ஜீவா, கணேசலிங்கன், டானியல் மகாகவி போன்ருேர் தமிழ் நாட்டோடு ஒத்துநிற்க வல்ல தரமான சிருஷ்டிகளை இக்காலத்தில் வார்த்துக் கொடுத்தனர்.

இக்காலத்தின் முதிர்ச்சியில்தான் (1960) தமிழ்நாட்டுஎழுத்தாளர்பகீரதன் இலங்கை வந்தார். வந்தவர் தெரியாத்தனமாக, "இலங்கை எழுத்தாளர்கள் சிருஷ்டி இலக்கியத்துறையில் தமிழ் நாட்டு எழுத்தாளர்களைவிட பத்து வருஷம் பின்னுக்கு நிற்கிருர்கள்" என்று சொன்னுர். அவ்வளவுதான் நமது தரமான எழுத்தாளர்கள் குதித்து எழுந்தனர். ஈழத்து எழுத்தாளர்களின் பக்குவத்தையும் பார்வை விரிவையும் காட்டுவது போல் பகீரதனுக்கு தக்க பதில் கொடுத்தனர். தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் ஈழத்து எழுத்தாளர்களுக்கு இடமளிக்காத சிறுமையை எடுத்துச் சாடினர். பகீரதன் பயந்தே போனுர்.

இன்று நாம் 1970 ல் நிற்கிறேம். பகீரதனுக்கு முன்னுல் 'பார் எமது படைப்புகளை' என்று வீசி எறிவதற்கு அன்று எமது ஆக்கங்கள் நூல் உருப் பெற்றிருக்கவில்லை. ஆனுல் இன்று ஏராளமான தரமான சிறுகதைகள், நாடகங்கள் நாவல்கள் கட்டுரைகள் நூலுருப் பெற்றுள்ளன.

அன்று இந்தியப் பத்திரிகைகள் எமது எழுத்தாளர்களுக்கு இடமளிக்கவில்லை என்று கோபாவேஷப்பட்டோம். இன்று இந்தியப் பத்திரிகைகள் தான் எமது வாசகரையும் எழுத்தாளரையும் கெடுக்கின்றன என்ற அளவுக்கு வளர்ந்விட்டோம்.

அன்று நாம் பகீரதனேடு போர் தொடுத்தபோது அது எழுத்தாளர் உலகம் மட்டுமே தெரிந்த போராக இருந்தது. இன்று நாம் இந்தியப் பத்திரிகைகளைத் தடை செய்யுங்கள் என்று கோஷமிடும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

### ஆலயப் பிரவேசம் இன்னேர் கோணம்

# அகமும் ஆலயமும்

"சாதி இரண்டொழிய வேறில்லை' என்ருர் ஔவையார்' அவர் குறிப்பிடும் இந்த இரண்டு சாதியும் பிறப்பினுல் ஏற்பட்டதைப் பற்றியன்று, மனத்தினுல், அதாவது அதன் விரிவாலும் குறுக்கத்தாலும் ஏற்பட்டதைப் பற்றியது. பிறப்பினுல் ஏற்பட்ட சாதிப் பாகுபாட்டை அவர் பொருட்படுத்தியதாகவே இல்லை. பிறப்பினுல் ஒருவன் உயர்ந்த போதும் மனத்தினுல் தாழ்ந்தவனுக, அதாவது மனிததர்மத்துக்குப் பிழையாக நடப்பானேயாகில் அவன் கீழோனுகவும் பிறப்பினுல் தாழ்ந்திருந்தும் மனத்தினுல் சிறந்தவனை மேலோனுகவும் ஔவையார் மதிக்கிருர். உண்மை, ஆனுல் இன்றைய உலகில் ஔவையார் குறிப்பிடும் சாதிப் பாகுபாடுகூட, அதாவது, மனத்தின் விரிவு- குறுக்கம் இவற்றின் அடிப்படையில் அளக்கப்படும் சாதிப் பாகுபாடுகூட இருப்பது ஏற்றதன்று. அது நமது மனித குலத்தினது வளர்ச்சியின்மையையும் முழுமையற்ற தன்மையையுமே இன்னும் சுட்டுகின்றது. ஆகவே நாம் முழுமையடைய வேண்டுமானுல் அந்த முழுமையில் ஒருமையுற வேண்டுமானுல் ஔவையார் குறிப்பிடும் மன அடிப்படையில் எழும் சாதிப் பாகுபாடுகூட ஒழிந்த உன்னத நிலையை நாம் அடையவேண்டும்.

நமது வளர்ச்சி, அதாவது மனித குலத்தின் வளர்ச்சி அதன் பாகுபாடு நீங்கிய ஒருமையுறலிலேயே முழுமையடைகிறது என்றேன். ஒருமையுறல் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று. இந்த ஒருமையுறல் எதன் அடிப்படையில் ஏற்படுகிறது? ஏற்படவேண்டும்? இந்தக் கேள்வி, இந்தப் பிரபஞ்சம், அதன் இயக்கம் ஆகிய அனைத்துக்கும் அடிப்படையாகவுள்ள ஒன்றுக்கு நம்மை இட்டுச் செல்கிறது இங்குள்ள அனைத்துக்கும் அடிப்படையாய் உள்ளது எது? அதுதான் சத்தியம் -அதாவது தெய்வீகத் தன்மை. எதற்குள்ளும் எந்தப் பொருளுக்குள்ளும் ஊடுருவி, தாயாக, தனிப்பொருளாக நிற்பது இத்தெய்வீகமே. இதை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்படும் போது தெய்வீகத்தைத் தளமாகக் கொண்டு மனிதகுலம் இயங்கும்போது உலகம் ஒருமையுறுகிறது.

ஸ்ரீ நந்தகோபாலகிரி
தலைவர், சர்வமத சங்கம்
இலங்கை

புறத்தோற்றத்தில், புரியும் தொழிலில் நாம் வேறுபடலாம். ஆனுல் அத்தகைய புறத்தோற்றங்களும் வேற்றுமையும், தெய்வீகச் சக்தி தன்நோக்கைச் செயல்படுத்தத் தரித்துக்கொள்ளும் வேடங்கள். எப்படிப் பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தும் அடிப்படையில் சக்திமயமானவை என்று விஞ்ஞானிகள் கூறுகிருர்களோ அதேவிதத்தில் அடிப்படையில் தெய்வீகத் தன்மையே எல்லாவற்றுக்கும் சுயம். எப்படி ஒரு குடும்பஸ்தன், ஒருவருக்கு அண்ணனுகவும், மற்றவருக்குத் தம்பியாகவும், இன்னெருவருக்கு மைத்துனனுகவும் கணவனுகவும் காட்சி தருகிருனே அதே விதத்தில் ஒரே தெய்வீகச் சக்தியே பல தோற்றங்களை ஏற்கிறது. இதைப் போலவே பரப்பிரம்மம் என்பதும் அல்லாஹ் என்பதும் பரிசுத்த ஆவி என்பதும் புத்தஞானம் என்பதும் ஒன்றையே குறிப்பிடுகின்றன. ஒரு பொருளையே மதங்கள் வெவ்வேறு பெயரில் தருகின்றன, ஆகவே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக நிற்பது ஒன்றே, அந்தத் தெய்வீகமே. இந்தத் தெய்வீகத்தில் எமது ஆன்மா லயப்பட வேண்டும். நாங்கள் அதை லயப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையார் கூறியதும் அதைத்தான். அப்படி நமது ஆன்மா தெய்வீகத்தில் லயப்படும்போது நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆலயமாக, கோவிலாக மாறுகிறேம். இந்த விதத்தில் நம்முள்ளே தெய்வீகம் மலர்ச்சியுறும் போது நமக்கு, நாம் சென்று வழிபட வேறு எந்தப் புறக் கோவிலும் தேவையற்றதாகி விடுகிறது.

ஆனுல் நமது இன்றைய நிலையோ அந்தத் தெய்வீகச் சக்தியின் மலர்ச்சிக்கு எந்த வித தயாரிப்பும் அற்ற குறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. நாம் சத்தியத்தை உணராதவர்களாக மட்டுமல்ல சத்தியத்தையே துஷ்பிரயோகம் செய்பவர்களாகவும் வாழ்கிறேம். எமக்குள்ளே பிறப்பின் அடிப்படையில் எழுந்த சாதிப் பாகுபாடு இன்னும் ஓயவில்லை. மாருக அதன் அடிப்படையில் எழுந்த போட்டியும் பூசலுமே அதிகம். இந்த நிலையில் நாம் நமது அகத்தை ஆலயமாக்குவது என்பது பகற்கனவே.

தொடர்ச்சி 3ம் பக்கம்

### ஜெயகாந்தன் சொன்னவை

# பாரதிக்குப் பின் எழுத்துலகம்

பாரதிக்குப் பின் எழுத்துலகம் எப்படி இருக்கிறது?

பாரதி வாழ்ந்த காலத்திலும் அவனுக்கு முற்பட்டகாலத்திலும் வாழ்ந்த இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒரு இலக்கிய இலக்கு இருந்தது. சமய இலக்கியங்களைப் படைத்தவர்களுங்கூட மக்களை வீடு (மோட்சம்) பெறவைக்க வேண்டும் என்ற இலட்சியம் (இலக்கு] இருந்தது. ஆம் அன்று வாழ்ந்த எழுத்தாளர்கள் அறம், பொருள, இன்பம்' வீடு என்ற நான்கு இலட்சியங்களை வைத்து இலக்கியம் சிருஷ்டித்தார்கள்.

ஆனுல் பாரதிக்குப் பின்- சுதந்திரத்திற்குப் பின் - நிலைமைவேறு. எண்ணிக்கையில் இலக்கிய கர்த்தாக்கள் அதிகமாக இருக்கலாம். அவர்கள் படைத்த இலக்கியமும் எண்ணிக்கை கூடலாம். ஆனுல் அவற்றில் இலட்சியம் இல்லை. ஏன்? எழுதுகின்றவர்களுக்கு எனறு ஒரு இலட்சியம் இருந்தால் தானே, அவர்கள் சிருஷ்டிகளில் அந்த இலட்சியங்களைக் காணமுடியும்! இலக்கு இன்றியே இனறு இலக்கியம் சிருஷ்டிக்கின்றனர்.

இன்றைக்குப் பேனு பிடிக்க வந்தவர்களெல்லாம் எழுத வேண்டுமென்பதற்காக எழுதுகிருர்கள். அவர்களைக் கேட்டால் எதற்காக எழுதுகிறேம் என்பது அவர்களுக்கே தெரியாது! இன்றைய எழுத்தாளனை 'எதற்காக எழுதுகிருய்?' எனக் கேட்டால் என்ன சொல்லுகிருன்? பணத்திற்காக என்பது ஒரு பதில். பொழுது போக்கிற்காக என்பது வேருெருபதில். மற்ருெரு பதில் இன்னும் விசித்திரமானது. எழுதவேண்டுமென்பதற்காக எழுதுகிறேன்!'

செடியில் மலர் எதற்காக மலர்கிறது? என்று எப்படிக்கேட்க முடியாதோ அப்படியே எழுத்தாளனையும் எதற்காக எழுதுகிருன் எனக் கேட்க முடியாது என்று சில எழுத்தாளர் வாதாடுகின்றனர்; இப்படியானவர்கள் தான் பாரதிக்குப் பின் வந்த எழுத்தாளர்கள்.

அலுவலகங்களில் பல்வேறு வேலைபார்ப்பவர்களில் சிலர் தங்களது சம்பளத்தில் விழும் பற்ருக்குறை பட்ஜெட்டை நிரப்ப ஒரு சிறுகதை எழுதலாம் என்று எழுதுகிருர்கள். அது பிரசுரமானுல் ரூ 50 கிடைக்கும். இப்படி மாதா மாதம் 50 ரூபா கிடைக்கும் என்பதற்காக எழுதப்படும் கதைகளும் உண்டு.

இவர்களது கதைகளில் எப்படி ஒரு இலட்சியம் மிளிர முடியும்'

இப்படி நான் சொல்லும் பொழுது "நீ பணத்திற்காக எழுதவில்லையா?" என்று சிலர் கேட்கலாம். நான் பணத்திற்காக என்று எழுதவில்லை. என்னுடைய இலட்சியத்திற்காக நான் எழுதுகிறேன். அதற்குப் பணம் தருகிருர்கள் வாங்கிக் கொள்கிறேன். அவ்வளவு தான்! யாரும் பணம் தரவில்லை என்ருலும் நான் ஒழுதுவேன். நான் கதை எழுதிக் கொண்டு எந்தப் பத்திரிகை அலுவலகத்திற்கும் அலைந்ததில்லை.

இன்றைக்கு எழுதுகின்றவர்கள் எல்லாம் சினிமாவை மனதில் வைத்துக் கொண்டே எழுதுகின்றனர், இந்தக்கதை சினிமாவாக எடுக்கப்பட்டால் இந்தப்பாத்திரத்தில் இன்ன நடிகர் நடிக்க வேண்டும் என்று மனதில் பதியவைத்தே எழுதுகின்றனர்.

நான் எனது படக் கம்பெனியில் அமர்ந்திருந்த பொழுது ஒரு எழுத்தாளன் கை நிறையப் பேப்பர் கட்டுடன வந்தார். அத்தனையும் அவர் எழுதிய கதை வசனங்களாம்[ 'எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டேன். "எனது கதைவசனங்களை நீங்கள் பயன்படுத்த வேண்டும்" எனக் கூறினுர்.

"நானே ஒரு எழுத்தாளன் தானே?" என்றேன் நான்,

'அப்படியென்ருல் இந்தக் கதை வசனங்களை உங்கள் பெயரிலேயே போட்டுக் கொள்ளுங்கள்!" என்ருர் அவர்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. எழுத்தாளர் நிலை எவ்வளவு கேவலமாகி விட்டது என வருந்தினேன் இந்த நிலைக்கு அவர் வந்தது வறுமையினுல் எனக் கூறலாம் நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். வறுமை காரணம் என்ருல் அவர் வேறு வேலைக்குப் போவதுதானே? எதற்காக எழுதவரவேண்டும்? நான் அப்படித்தான் செய்வேன். மூட்டை தூக்கியாவதுபிழைப்பேனே தவிர, எழுத்தை ஏலம்போட மாட்டேன்.

அடுத்து தொடர்கதைகளைப் பற்றியது. 'சங்கர் மனச்சோர்வுடன் மாடிப்படியருகே நின்று கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்குத் தெரியாமலேயே அவனருகே யாரோ வந்து நிற்பதுபோலத் தெரிந்தது... (தொடரும்) எனத் தொடர்கதைகளை முடித்து விடுகிருர்கள்.

இப்படித்தான் இன்றைய பத்திரிகைகளில் தொடர் கதைகள் வருகின்றன. காவலிருந்து அடுத்த வாரத்தை எதிர்பார்த்து அடுத்த இதழை வாங்கிப் படிக்கிருன், ரஸிகன். 'மாடிப்படியருகே நின்றிருந்த சங்கர் தன் பின்னுல் வந்திருப்பது யாரென்று அறிவதற்காகத் திடீரெனத் திரும்பிப் பார்க்கிருன், வேருென்றுமில்லை சங்கரின் நிழல் தான் அது......! அப்பாடா! என்றுசங்கர் ஆழ்ந்த பெருமூச்சொன்றை விட்டான். அடுத்த இதழின் கதை ஆரம்பம் இப்படி ஆரம்பிக்கப்படும். இப்படி ஒன்றுமில்லாதவிஷயத்தைச் சொல்லி வாசகனை ஏமாற்றுவது தான் இன்றைய தொடர் கதைகள்.

இப்படியாக இன்று இலக்கு இன்றி இலக்கியங்கள் தோனறிக்கொண்டே வருகின்றன.

(சென்னை கலைஇலக்கியப்பெருமன்றம் நடத்திய பாரதிவிழாப்பேச்சு)

—நன்றி: மல்லிகை (1966)

# தமிழ் மாணவரின் விஞ்ஞானக் கல்வியும் அதன் விளைவுகளும்

இன்று இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் விஞ்ஞானக்கல்விக்கு ஓர் தனி மதிப்பும் போட்டியும் நிலவுவது யாரும் காணக் கூடிய ஒன்று. எந்தப் பெற்றோரைக் கேட்டாலும் "என்ர மகன் சயன்சு படிக்கிறான்" என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமையைக் காண்கின்றனர். ஆனால் இந்தப் பெற்றோரின் பெருமையையும் சயன்ஸ் கல்விக்கு மாணவர்கள் (தங்களால் இயலாவிட்டாலும்) காட்டும் போட்டா போட்டியையும் பார்த்து விட்டு, ஏதோ தமிழ் இளைஞர்கள் விஞ்ஞானத்தில் மிகுந்த ஈடுபாடும் விஞ்ஞான ரீதியான சிந்தனையும் கொண்டுள்ளார்கள் என்று யாராவது எண்ணினால் அவருக்காக நாம் வருத்தப்பட வேண்டும். ஏனெனில் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள இந்த விஞ்ஞான மோகத்துக்குக் காரணம் அவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியில் இருக்கும் உண்மையான பற்றன்று. மாறாக அவர்களுக்கு உத்தியோகத்தில் இருக்கும் பற்றே இதற்குக் காரணம். அதாவது பொருளாதாரப் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டதே இந்த விஞ்ஞான மோகம் என்று சுருக்கமாகச் சொல்லலாம். முன்னர் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த போது, எப்படித் தமிழரெல்லாம் உத்தியோகத்தை நோக்காக வைத்து ஆங்கிலப் படிப்பில் அக்கறை காட்டினார்களோ, அதே நோக்கில்தான் இன்றும் இந்த 'சயஞ்சு' படிப்பும் நடைபெறுகிறது. கலைப்பட்ட தாரிகளுக்கு இன்று இலங்கையில் அருகி வரும் வேலை வாய்ப்பு, கீழ் வகுப்பிலுள்ள மாணவரெல்லோரையும் விஞ்ஞானப் படிப்புக்குத் திருப்பி விட்டிருக்கிறது. இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் பல.

வேலை தேடும் நோக்கத்தின் அடிப்படையிலிருந்து எழுந்த இந்த விஞ்ஞானக் கல்வியின் மோகம், கலைப்படிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்களிடையே அழித்து மறைத்த தோடல்லாமல், கலைப்படிப்பே கூடாது என்னும் மனோபாவத்தை வளர்க்குமளவுக்கு இன்று வளர்ந்து விட்டது. இந்தப் போக்கு எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்திடையே ஏற்படுத்தப் போகும் ஆரோக்கிய வீழ்ச்சியையும் இன்னும் பல ஆபத்துகளையும் நாம் முன்கூட்டியே உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும்.

'படிப்பதெல்லாம் உத்தியோகத்துக்கு' என்று இன்று நம்மிடையே தவறாகப் புகுந்து விட்ட நோக்கின் காரணத்தினால் அதைப் புகுத்தி விட்ட சமூக அமைப்பினால் எழுந்த சிக்கல்களே இவை. படித்தவர்கள் உத்தியோகம் பார்க்க வேண்டுந்தான். ஆனால் அதுவல்ல பிரச்சனை. 'சயன்ஸ் படித்தால் உத்தியோகம் கிடைக்கிறது, அதனால் அது ஆர்ட்சை விடச் சிறந்த படிப்பு, என்று உத்தியோகத்தின் அடிப்படையில் வைத்து விஞ்ஞானப் படிப்பையும் கலைப் படிப்பையும் எடைபோடும் அளவுக்கு நமது அறிவும் பார்வையும் கீழிறங்கி வந்து விட்டிருப்பதுதான், பரிதாபத்துக்குரிய விஷயமாகும்.

விஞ்ஞானப் படிப்போ கலைப் படிப்போ அல்ல உத்தியோகம் தருவது விஞ்ஞானப் படிப்பும் இன்னும் கொஞ்சக் காலத்தில் உத்தியோகம் தராத படிப்பாக வரப்போகும் காலம் தூரத்திலில்லை. இப்பவே மருத்துவம் படித்தவர் 'வெயிட்டிங் லிஸ்டில்' நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்படியே மற்ற விஞ்ஞானத் துறைகளுக்கும் ஏற்படலாம். இவையெல்லாம் எதைச் சுட்டுகின்றன? படிப்பின் துறைகளன்று உத்தியோகத்தை நிர்ணயிப்பன, ஓர் நாட்டை ஆளும் அமைப்புத்தான் உத்தியோகத்தை நிர்ணயிப்பது என்பதையே இவை சுட்டுகின்றன. திட்டமிட்ட கல்வியும் பொருளாதார அமைப்பும் ஏற்படாத வரைக்கும், இவற்றைத் தரக் கூடிய அமைப்பொன்று தோன்றாத வரைக்கும் இந்த உத்தியோகப் பிரச்சனை நீடித்துக் கொண்டுதான் இருக்கும். ஆகவே உத்தியோகம் தங்கியிருப்பது படிப்பிலன்று, அமைப்பில். அப்படியானால் இந்த அமைப்பை மாற்றுவதெப்படி?

இந்தக் கேள்வியைக் கொண்டே சயன்ஸ் படிப்பின் மகத்துவத்தைக் குறைக்கலாம். அதாவது சயன்ஸ் படிக்கும் மாணவர்கள் கட்டுப்பெட்டிகளாகவும், வெளிவிவகாரச் சிந்தனை அற்றவர்களாகவும், அரசியல் சமூக பொருளாதார உணர்வு தலைதூக்காதவர்களாகவுமே பொதுவாக உள்ளனர். இவர்களிடம் கலைப்படிப்பு மாணவர்களிடம் இருக்கும் வளர்ச்சியை நோக்கி மாற்றத்தைக் கோரும் உணர்வு காணக்கிடைப்பது அரிது அவர்கள் படிக்கும் பாடங்களும் சூழலும் அவர்களை அப்படி ஆக்குகின்றன. இவற்றின் தாக்கங்களை நாம் வேறு துறைகளில் காணக் கூடியதாய் உள்ளது. உதாரணமாக, இன்றும் தமிழ்ப் பகுதிகளில், சமூக பொருளாதார மாற்றத்தைப் பற்றி எதுவித அக்கறையும் காட்டாத பிற்போக்கு அரசியல் கட்சிகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று சொல்லலாம். அதாவது வெறும் விஞ்ஞானப் படிப்பு, பரந்துபட்ட சிந்தனை எழுச்சிக்குத் தடையாகவும் பண்பாட்டு முதிர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் நிற்கிறது. அத்தோடு விஞ்ஞான மோகம் உத்தியோகத்தின் அடிப்படையில் எழும்போது அது விழுத்திவிடும் பார்வைக் குறுக்கமும் சிந்தனைச் சீரழிவும் அளவு கடந்து விடுகிறது.

ஆகவே இவற்றிலிருந்து மாற்றம் பெற வேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் விஞ்ஞானத்தோடு சேர்ந்த கலைப்படிப்பும் அவசியமாகிறது. அதுவே முழு வளர்ச்சியைக் காட்டுவதோடு தேக்கத்துக்கு இடங்கொடுக்காத உணர்வையும் இளைஞரிடையே எழுப்புகிறது. அதேநேரத்தில் கலைப்படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் இன்று விஞ்ஞான ரீதியாகவும் சிந்திக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். ஆகவே கலைப்பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கும் விஞ்ஞானக் கல்வி அவசியமாகிறது. அப்போதான் கலைப்படிப்பும் முழுமையடைகிறது.

ஆகவே இன்று தேவைப்படுவது ஆரம்ப வகுப்புகளிலாவது- கடைசி ஜி. சி. ஈ வரையாவது மாணவர்களுக்கு விஞ்ஞானம் - கலை ஆகிய இரு துறைகளிலும் அறிவு வளரக் கூடிய விதத்தில் பாடத்திட்டங்களை அமைத்துப் பயிற்றுவிப்பது. அதுவே இன்றைய சமூக, அரசியல் பொருளாதாரத் தேக்கத்தை உடைத்து நாட்டை முற்போக்காக வளர்ப்பதற்கு எதிர்காலச் சந்ததியினருக்கு வழியமைப்பதாக அமையும்.

2ம் பக்கத் தொடர்ச்சி

## அகமும் ஆலய...

முதலில் அகம் தூய்மையுற வேண்டும். அப்பொழுதே நமது புறச் செயல்களும் தூய்மையுறுகின்றன. அகத்தூய்மை அற்றதனாலேயே அகத்திலுள்ள ஆணவமும் அகங்காரமும், ஆலயங்களுக்குள்ளும் கொலுவேற்றப்படுகின்றன. அதனால் உயர்ந்த சாதிக்கே கோயில் என்னும் ஓர் தனியுரிமைக் கோஷம் கோவில்களுக்குள்ளும் புகுத்தப்படுகிறது. இது சத்தியத்தைப் பற்றிய நமது தெளிவின்மையையே சுட்டுகிறது. எதற்குள்ளும் தெய்வீகமே அடியோடு நிற்கும் போது நாம் எந்தத் தர்க்கத்தின் அடிப்படையில் இன்னொரு வகுப்பாரைத் தள்ளி வைக்க முன்வருகிறோம்? எல்லாமே தெய்வீகமாகும் போது நாம் தள்ளி வைக்கும் வகுப்பாரும் தெய்வீகமே. ஆகவே தெய்வீகமே தள்ளிவைக்கப்படுகிறது. ஆகவே நாம் கோவிலுக்குள் ஒரு சாராரை உள்விட்டும் இன்னொரு சாராரை தள்ளிவைத்தும் விழாவெடுக்கும் போது தெய்வீகமே பிரித்துத் துண்டாடப்படுகிறது. அதனால் அரைகுறைக் கடவுளுக்கே நாம் விழா எடுக்கிறோம். விழா முழுமையுற வேண்டுமானால், தெய்வீகமுற வேண்டுமானால் தள்ளிவைக்கப்பட்டோரும் ஒன்றாக்கப்பட வேண்டும். எல்லாவற்றையும் தெய்வீகப் பார்வை ஆட்கொள்ள வேண்டும். அப்போது எச்செயலிலும் எந்தவித தனியுரிமையும் அற்றுப் போகிறது. தனியுரிமை எப்பொழுதும் சத்தியத்தைத் துண்டாடுவது.

அதேநேரத்தில் சத்தியம் துண்டாடப்படும் ஒவ்வொரு நேரமும் அதை எதிர்ப்பவர்கள் சத்தியத்தை உணர்ந்து அதன் அடிப்படையிலேயே போராடுபவர்களாக இருக்க வேண்டும். தெய்வீகம் துண்டாடப்படும் போது, அதற்கெதிராகப் போராடும் நாம் அதை தெய்வீகத்தைக் கொண்டே போராடவேண்டும் இல்லையேல் ஆணவமே இன்னோர் விதத்தில் நல்முயற்சியையும் ஆக்கிரமித்துக் கொள்கிறது. இதை இன்று தெய்வீகத்தின் பக்கம் ஆயுதமாகக் கொண்டு போராடுவார் நன்குணர வேண்டும். இதையே மகாத்மா காந்தி நமக்குச் செய்து காட்டியுள்ளார். ஆமாம் அவர்காட்டிய சத்தியப் போர்முறை அகிம்சையே.

வடமாகாண மக்களுக்கோர் வரப்பிரசாதம்

புத்துணர்வூட்டும் குளிர்பான வகைகள்

ஓரஞ்பார்லி ★ பைன்ஆப்பள்
முக்கனிச்சாறு ★ விஞேகிரஷ்
பஞ்சாமிர்தம் ★ ஐஸ்கிறீம்

தயாரிப்பாளர்கள்:

சீதா சோடா தொழிற்சாலை

291, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(டெலிவரி இனம்)

விற்பனையாகின்றன!

மு. தளையசிங்கம் எழுதிய
போர்ப்பறை

மு. பொன்னம்பலம் எழுதிய
அது

எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

மாதந்தோறும் மலரும்
முற்போக்கு இதழ்
"மல்லிகை"

ஆசிரியர்:
டொமினிக் ஜீவா

விலை சதம்: 35

# தோழர் வ. பொன்னம்பலம் கூறுகிறார்

தோழர் வ. பொன்னம்பலம் மணிகரனுக்கு அளித்த பேட்டியின் விபரம் தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்தது. பலர் அதை ஏற்கனவே படித்திருப்பார்கள். பலமுறை படித்தறியப் படவேண்டிய விபரங்களைக்கொண்ட பேட்டி அது தமிழர்களைப் பீடித்துள்ள அரசியல் இருள் அகலுவதற்கு அது பெரிதும் உதவும்.

இங்கு அப்பேட்டியிலிருந்து சில பகுதிகளைப் பிரசுரிக்கின்றோம். தமிழ்ப்பற்றும் உணர்ச்சியும் வெறும் அர்த்தமற்ற, அறிவற்ற வெறியாக மாறியிருக்கிறது இன்றைய பெரும்பாலான தமிழர்களிடம். தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம் என்று தமிழ் என்ற பெயரில் ஒட்டுண்ணி போல் வாழும் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களுந்தான் தமிழின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இன்று தடையாக நிற்கிறார்கள். அவர்களிடம் வெறும் பற்றும் உணர்ச்சியும் வெறியாக மாறி நிற்கின்றன. அறிவு இல்லை. இன்று தேவைப்படுவது அறிவு. ஞானம். அவற்றின் மூலமே தமிழை வளர்க்கலாம். சோழர், பாண்டியர் காலத்தைப்பற்றிய கற்பனை நிகழ்ச்சிகளில் வாழும் தமிழ்ப்பகுதி அரசியல் வாதிகளுக்கும் தோழர் வ. பொன்னம்பலத்தின் இக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

அத்துடன் வேறு ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறோம். தேர்தலுக்குப்பின் ''சோசலிசம்'' பேசுவோர் இன்று பலர் இருக்கின்றனர். நல்ல அறிகுறிதான். இருந்தாலும் தேர்தலுக்கு முன்பே அந்தவிதத்தில் பலர் பேசியதில்லை. ''சத்தியம்'' தேர்தலுக்குமுன்பிருந்தே தோழர் வ. பொன்னம்பலத்தை ஆதரித்து எழுதிவந்ததுடன் தமிழ்ப்பகுதிகளிலுள்ள ''தமிழ்க்கட்சிகள்'' எல்லாவற்றையும் அழித்துவிட்டு ஒரு முற்போக்கான ஐக்கிய முன்னணியை உருவாக்கவேண்டுமென்றும் பிரசாரம் செய்து வந்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

தமிழ் மக்களின் விமோசனத்திற்கு ஒரு புதியபாதை' ஒரு புதிய தலைமை வேண்டும் என்பது பரவலாப் பொதுமக்கள் மத்தியிலும்' குறிப்பாக வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும் என்று துடிக்கும் இளைஞர்கள் மத்தியிலும் அண்மைக்காலத்தில் அரும்பி விரைந்து வளர்ந்து வருகின்ற ஓர் அரசியல் பேரவா, புதுமையை நாடி' புரட்சியை நாடி இடதுபக்கம் சாய்வதில் என்ன வியப்பு?

... ... ...

இலங்கையில் தமிழர் மத்தியில் கடந்தகாலத்தில் இயங்கிவந்த அரசியல் கட்சிகள் இரண்டும் (காங்கிரஸ், தமிழரசு) பழமைப் பாதுகாப்பு, பிரபுத்துவமனப்பான்மை முதலாளித்தத்துவ சமூகத்தில் நம்பிக்கை, சோஷலிஸ எதிர்ப்புமனப்பான்மை முதலியவற்றில்ஊறித் திளைத்தவை. இவற்றுக்கிடையே உள்ள வேற்றுமை கழுதைக்கும் வரிக்குதிரைக்கு மிடையேயுள்ள வேற்றுமையையே ஒத்தது. இவர்களின் அரசியல் பகைமையும் போட்டியும் தலைமைக்கே ஒளிய மக்களின் வாழ்வை மாற்றி அமைக்கும் பணிக்கல்ல.

தலைவர்களின் திறமையை நம்பி இனப்பிரச்சனை' மொழிப் பிரச்சனைகளைத் தீர்த்து விடமுடியாது என்பதற்குச் சிறந்த உதாரணமாக மிகச்சிறந்த தகமைகள்உள்ள தலைவர்கள் என்று இன்று மதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களை வெறும் அரசியல் பாலைவனத்தில் இட்டுச்சென்றுள்ளார்கள் என்பதனை நாம் கவனிக்கும் போது நன்றாகத் தென்படுகிறது. எமது கடந்தகால அரசியல் தலைமையைப் பார்க்கும் போது இவர்கள் தலைமைக்குப் போட்டியிட்டார்களேயன்றி தலையாய பிரச்னைகளான சமூகக்கட்டுக்கோப்பை மாற்றும் துறையில் மூரண்பட்ட கோட்பாடுகளைக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

பலன் தாராத மலட்டு அரசியல் கோட்பாடுகளை மக்கள் எவ்வளவு காலம்தான் தொடர்ந்து பின்பற்றத் தயாராக இருப்பார்கள்? கீறுண்ட இசைத்தட்டைப் போன்று, பழைய பல்லவியைத் தொடர்ந்து பாடும் தலைமையை விட்டுப் புதுமையை நாடுகின்றார்கள்.... புதுமை காண விரும்பும் கொள்கைகளை உள்ளடக்கியுள்ள எமது இயக்கத்தை நாடி இங்கு மாத்திரமல்ல நாடுமுழுவதிலும் வாலிபர்கள் மத்தியிலும் பேரெழுச்சி உண்டு.

... ... ...

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைச் சுரண்டிவாழ முடியாத சமூக அமைப்புத்தான் சோஷலிஸம் என்பது உண்மையாயின்' எப்படி ஒரு கூட்டம் மனிதர் இன்னொரு கூட்டம் மனிதர்களை — எண்ணிக்கையால் சிறிதாயினும் பெரிதாயினும்சரி —அடக்கி ஆளமுடியும்? எனவே சோஸலிஸந்தான் மனிதசமூகத்தை எதிர்நோக்கும் பல பிரச்சனைகளையும் தீர்க்கவல்ல ஒளஷதம். அப்பேர்ப்பட்ட கைகண்ட மருந்து இருக்கும் போது நான் சமஷ்டிக்கட்சியை நாடுவதாயின் இரும்புச் சலாகையை விழுங்கிய ஒருவன் மிளகு ரசம் குடித்துப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று எண்ணுகின்ற அறிவு நிலைக்குச் சமமாக எம்மைத் தள்ளிவிட்டதா?

இலங்கையிலுள்ள தமிழரசுக் கட்சியைப் பேச்சளவில் அளக்காது, அவர்களுடைய நடைமுறைகளைச் சற்றுப் பார்ப்போமானால் அவர்களுடைய அரசியல் விசுவரூபம் தென்படும். இக்கட்சி விதேச நலனை கருதும் ஏகாதிபத்திய நாடுகளுடன் ஒட்டி உறவாட அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் தயங்குவதில்லை. இக்கட்சி தமிழ் மக்களை உலகில் உள்ள குடியேற்ற ஆதிக்க நாடுகளில் இடம் பெறும் பேரெழுச்சிகளையும் புரட்சியினையும் அறியவிடாமல் இருட்டறையில் வைத்திருக்க விரும்புகின்றது. இலங்கையின் தேசிய விடுதலையை முழுமைப் படுத்தும நோக்குடன் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொண்டுவந்த கட்டுநாயக்கா, திருமலை போன்ற யுத்த தளங்களை இலங்கை பொறுப்பேற்க வேண்டுமென்ற - ஆலோசனையை இலங்கையின் பூரண விடுதலை நாடி நின்ற சகல தேசபக்தர்களும் இயக்கங்களும் அதிர்ச்சியுறும் வகையில் தமிழரசுக்கட்சி எதிர்த்தது. மேலும் பஸ் தேசியமயம், துறைமுகதேசியமயம், நெற்காணி மசோதா, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் போன்ற மக்களுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய திட்டங்களை முற்றுக முழுமூச்சுடன் எதிர்த்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் மக்கள் வங்கி கிளைகள் நிறுவுவதை எதிர்த்தார்கள். நான் அறிந்தவரையில் தமிழ் அரசுட்கட்சியினர் இத்தகைய செய்கைகளின் மூலந்தான் பெருமளவில் சிங்களமக்களின் சந்தேகத்தையும் பகைமையையும் கொள்கையளவில் வலியத் தேடிக்கொண்டனர்.

கடந்த பத்து ஆண்டுக்காலமாக உரிமையை வலியுறுததுகின்ற வேளையில், வேண்டாத பகைமை வளர்க்கக்கூடிய சிங்கள எதிர்ப்புப் பிரசாரத்தில் இறங்கினார்கள். இதற்கு நல்ல சான்றாக சிங்கள ஸ்ரீ அழிப்பு இயக்கத்தைக் குறிப்பிடலாம. அரசுடன் உள்ள உரிமைப் போரை அரசியல் வடிவில் நடத்துவது நியாயமானது. அதற்காகச் சாதாரணப் பொதுச் சிங்கள மக்களை - ஏகாதிபத்திய வெறியர்கள் என்றும், நாய்கள் என்றும் பேய்கள் என்றும் மேடைகளில் பேசியும் கவிதை பாடியும் வந்துள்ளனர். ''நாய்க்குணங்கொண்ட நந்தசேனாவையும் பேய்க்குணம் கொண்ட புஞ்சிநோனாவையும்'' என்று தமிழினத்திற்குப் பல நூற்றுண்டுக் காலத்துக்கு உபத்திரவம் அளிக்கக்கூடிய வேண்டாத வகுப்புத் துவேஷப் பகையை வளர்க்க முன்னின்று உழைத்தார்கள்.

... ... ...

அகிம்சை வழி நிற்கின்றோம் என்றும், ஈழத்தின் அண்ணல் காந்தியின் அடியார்கள் என்றும் தம்மை வருணிக்க முயன்று வரும் இவர்கள் காந்தி அடிகளைப் போன்று அனைத்து இலங்கையிலும் உள்ள சிங்களமக்களின் மொழிக்குரிய இடத்தைத்தந்து தமிழ் உரிமை கேட்கவில்லை. தமிழ் அரசுக்கட்சித் தலைவர்கள் சிங்கள மொழியை நாம் எதிர்க்கவில்லை என்று அன்றும் கூறவில்லை, இன்றும் கூறத் தயங்குகின்றார்கள். ''சிங்கள மொழியை நாம் எதிர்க்கவில்லை, தமிழ் மொழிக்கு உரிமைதான் கேட்கின்றோம்'' என்று கூறியிருந்தால் உரிமைப் பிரச்சனை தீரும் நாள் அண்மையில் இருந்திருக்கும்.

... ... ...

மனிதன் வாழத் தத்துவம் வேண்டும். மனிதனை வாழ்விக்கும் தத்துவம், தான் வாழும் தத்துவமாகவும் அமையவேண்டும். சமூகத்தின் விடுதலை, முன்னேற்றம், செழிப்பு, சமாதானம் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக உழைக்கும் பத்திரிகைகளுக்கும் தத்துவம் இன்றியமையாதது.

... ... ...

பள்ளிக்கூடப் படிப்பைப் பெறும் வாய்ப்பைப் பெருதவர்கள்கூட சிலகாலம் கம்யூனிஸ்ட் கட்சியில் தொண்டாற்றிவிட்டால், அரசியல் வகுப்புக்களை அவதானித்து வந்தால் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை மாத்திரமன்றி - பேராசிரியர்களையுங் கூடத் திணறடிக்கும் அறிவையும் ஆற்றலையும் மார்க்ஸிஸ - லெனினிஸத்திற்கு ஊடாகப் பெற்றுவிடுகின்றார்கள்.

... ... ...

உலகநாடுகளில் அன்றும், இன்றும் இயற்றப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் படைப்புக்களை எமது நாட்டவர்களும் அறியும் வாய்ப்பினை மொழிபெயர்ப்புக்கள் மூலம் தர வேண்டும். அதேபோன்று ஈழத்தில் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களையும் உலகமொழிகளில் பெயர்த்து எமது கலைஞர்களுக்கு உரிய இடத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அனைத்தும் மனிதனுக்காக, அவனின் நல்வாழ்வே அனைத்துலக விமோசனத்திற்கும் வழி என்ற பேரிலட்சியங்கள் இத்தகைய இலட்சியப் படைப்புக்களையும் சிருஷ்டிகர்த்தாக்களையும் வழி நடாத்தும் நன்னெறிகளாக அமைவது அவசியம்.

---

1-ம் பக்கத் தொடர்ச்சி

## ஈழத்து எழுத்தாளர்க....

போலிக் கலைச்சாதனங்களும் பிற்போக்கு அரசியல் கட்சிகளும் அழிந்தொழியப் போவது உறுதி. அதுதான் முக்கியம்' இப்போது பொதுமக்களைத் தொடுமளவுக்கு ஏற்பட்டுள்ள கலை இலக்கிய விழிப்பு ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களிடம் 1956 லிருந்து தீவிரமடைந்து வரும் விழிப்பின் பாதிப்பேதான், இப்போதுதான் அது பொதுமக்களைத் தொடத் தொடங்கியிருக்கிறது. இனிமேல் அந்தவிழிப்பு தமிழ்ப் பொதுமக்களைப் பீடித்துள்ள அரசியல் குப்பைகளையும் தூக்கி எறியப்போகிறது. அதனுல்தான் அந்தக் குப்பை'' கட்சிகள் ''ஆபத்து ஆபத்து'' என்று இன்று கூக்குரலிடுகின்றன தமிழ் சாகப் போவதில்லை தமிழ் இனித்தான் மேலும் மேலும் வளரப்போகிறது, சாகப் போவது இந்தக் குப்பைச்சஞ்சிகைகளும் குப்பபை அரசியல் கட்சிகளுந்தான்.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

## அன்றும் இன்றும்

போது அது பொதுமக்களைத் தொடும் பிரச்சனையாகவே மாறிவிட்டது. அதனுல பொது மக்களையும் எங்கள் தரத்துக்கு உயர்த்துகிறோம்.

இனிமேல் பொதுமக்கள் சம்பந்தப்படாத விஷயங்கள் இருக்காது என்ற நிலைக்கே நாம் உயர்கிறோம். சரித்திரம் வேகமாகச் சுற்றுகிறது. தமிழ்நாடு தனது தரத்தை அளவிட இனிமேல் எங்களிடந்தான் வரப்போகிறது.

கலை இலக்கியத்துறைகளில் தரத்தைப் பார்ப்பதற்கு இன்று நாம் தமிழ் நாட்டுக்குப் போகத் தேவையில்லை. தமிழ்நாட்டுக்குப் பாடம் புகட்டும் வகையில் நம் சிங்கள நாடு வளர்ந்துள்ளது. ஆனல் சிங்களக் கலைஞர்களும் எழுத்தாளர்களுங்கூட நம் தலைமையை எதிர்பார்க்கும் வகையில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களும் கலைஞர்களுமாகிய நாம் இன்று வளரத்தொடங்கி விட்டோம். நமது அண்மைக்காலச் சிருஷ்டிகளைப் பார்த்தவர்கள், படித்தவர்கள் அதை உணர்வார்கள். ஆனல் நம் தமிழ்ப் பொதுமக்கள் இன்னும் அதைப் படிக்கத் தொடங்கவில்லை. அவர்கள் தென்னிந்தியத் தி. மு. க குப்பைகளையும் சினிமாக் கற்பனைகளையுமே படிக்கின்றனர். அதைத்தான் நாம் மாற்ற விரும்புகிறோம்.

---

அடுத்த இதழிலிருந்து கேள்வி - பதில் பகுதி இடம் பெறுகிறது. வாசகர் எது பற்றியும் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் கேட்கலாம்.

முகவரி: **சத்தியம்**
8/3, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

---

இப்பிரசுரம் யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பெற்று சர்வ மத சங்கம் - சர்வோதய இயக்கத்தால் வெளியிடப்பட்டது.